# POSITION OF WITNESS

## IN THE COURT OF : SUBORDINATE JUDGE'S COURT, SIVAGANGAI.

Original Suit : **OS** 319/2017 } Plaintiff : PW3
Deposition of Witness of } Defendant:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. ரமேஷ்கண்ணன் | District | : | |
| Father/ Husband name | : | திரு. காளிதாஸ் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 2573 of the day of 03.03.2026

**முதல் விசாரணை:**

நான் சிவகங்கை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலராக (கிராம ஊராட்சி) பணிபுரிகிறேன். மேற்படி நான் பணியாற்றும் பதவியானது முன்பு சிவகங்கை ஊராட்சி ஒன்றிய கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலகமாக பெயர் இருந்தது. நீதிமன்றத்தில் இருந்து கிடைத்த அழைப்பாணையின் பேரில் தாவா வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் கேட்கப்பட்ட ஆவணம் எங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால் தற்போது இல்லை அதனை தேடி பார்த்து வருகிறோம். பொதுவாக அரசு திட்ட பயனாளிகள் குறித்த விபரம் பதிவேடுகள் இருக்கும் என்றால் சரிதான். வாசாஆ 5 ஆவணம் எங்களது அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட ஆவணமா என்றால் வாசாஆ 5 ஆவணமானது எங்களது அலுவலக்தில் கொடுக்கப்பட்டதாக தெரியவருகிறது அதில் கையெழுத்து செய்ததாக கண்டுள்ள BDO பாலாஜி என்பவருடைய கையெழுத்து அவருடையதாக என்பது பற்றி எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை:**

நான் எத்தனை வருடமாக BDO வாக இருக்கிறேன் என்றால் 2 வருடமாக இருக்கிறேன். பொதுவாக ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் கிணறு தோண்டுவதற்காக ஒருவர் கடன் உதவி கேட்டால் அவரிடம் என்னென்ன ஆவணங்கள் அதற்காக

கேட்போம் என்றால் ஜீவன் தாரா திட்டமானது தற்போது நடைமுறையில் இல்லை மேற்படி திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படுவதில்லை மானியம் தான் வழங்கப்படும் மேற்படி மானியம் வழங்கிட அந்த நபர் சிறு குறு விவசாயி என்பதற்கான சான்றும் இடத்திற்கான உரிமை ஆவணமும் தாக்கல் செய்ய வேண்டும். மேற்படி மானிபம் சம்பந்தமாக தாவா வழக்கில் என்ன உரிமை ஆவணம் கொடுக்கப்பட்டது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. உரிமை ஆவணம் கேட்பது கேட்கும் நபருக்கு அந்த இடம் உரிமை பாத்தியமா என தெரிந்து கொள்ளத்தான் என்றால் ஜீவன்தாரா திட்டப்படி ஒரு இடத்திற்கு உரிமை பாத்தியம் உள்ளவருக்கு தான் மானிபம் வழங்கப்படும். மேற்படி அழைப்பாணையில் குறிப்பிட்ட ஆவணம் எனது அலுவலகத்தில் உள்ளதா என்றால் மேற்படி ஆவணத்தினை தேடிப் பார்த்தோம் கிடைக்கவில்லை ஆவணங்கள் குறிப்பிட்ட காலங்களில் அழிக்கப்படும் தாவா அழைப்பாணையில் கேட்கப்பட்ட ஆவணமானது 30 வருடம் பழைமையான ஆவணமாகும் மேற்படி ஆவணம் அழிக்கப்பட்டிருப்பதற்கு சாத்தியக்கூறுகள் அதிகம். அழிக்கப்பட்ட ஆவணங்களுக்கு பதிவேடுகள் பராமரிக்கப்படும் என்றால் சரிதான். மேற்படி பதிவேடுகள் எங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால் பார்க்க வேண்டும். மேற்படி பதிவேட்டினை பார்த்தால் தான் அழைப்பாணையில் கேட்கப்பட்ட ஆவணம் அழிக்கப்பட்டதா இல்லையா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் தாக்கல் செய்தால் அதன் உண்மைத்தன்மை தெரிந்து விடும் என்பதால் வாதி கேட்டுக்கொண்டதற்காக மேற்படி ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாசா ஆ 5 ஆவணத்தின் படி அதில் குறிப்பிடும் இடத்தில் கிணறு தோண்டப்பட்டதா இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.03.03 14:44:31 +0530